**செய்தி வெளியீடு எண்: 176** **நாள்: 25.02.2011.**

**மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் மாநில அளவில் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிக பால் வழங்கிய உற்பத்தியாளர்களுக்கு "டாக்டர் கலைஞர்" தங்கப் பதக்க விருது வழங்கினார்கள்**

மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்கள், பால்வளத்துறை மான்ய கோரிக்கையின் மீது 05.05.10 அன்று சட்டப்பேரவையில் உரையாற்றிய போது பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மாநில அளவில் அதிகமாக பால் வழங்கும் 10 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு முதல் மூன்று உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதல்வர் **டாக்டர். கலைஞர்** அவர்களின் பெயரில் தங்கப்பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழும் இதர ஏழு உறுப்பினர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த திட்டத்தை செயலாக்கும் விதமாக மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் இன்று காலை 25.02.2011 தலைமைச்செயலகத்தில் 2009–2010–ம் ஆண்டில் அதிகமாக பால் வழங்கிய 10 பால் உற்பத்தியாளர்களில் முதல் மூன்று இடங்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு "**டாக்டர் கலைஞர்**" அவர்களின் பெயரில் முதல் இடத்தைப் பெறுபவருக்கு 8 கிராம் தங்கப்பதக்கமும் (22 கேரட் மதிப்பு ரூ.22,000). இரண்டாம் இடத்திற்கு 6 கிராம் தங்கப்பதக்கமும் (மதிப்பு ரூ.16,500), மூன்றாம் இடத்திற்கு 4 கிராம் தங்கப்பதக்கமும் (மதிப்பு ரூ.11,000)ம் ஏனைய 7 இடத்திற்கும் தலா ரூ.5000 ரொக்கப்பரிசும், மேலும் அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினார்.

பால் உற்பத்தியை மேம்படுத்த பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசு பல்வேறு நல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு அம்சமாக சிறந்த பால் உற்பத்தியாளர்களை தேர்வு செய்து 2008–09 முதல் அவர்களை கவுரவித்து வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் பிரதம பால் உற்பத்தியாளர்களுக்கு 2008–09ஆம் ஆண்டுக்கு அதிகமாக பால் வழங்கிய முதல் 10 பால் உற்பத்தியாளர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு ரொக்கப்பரிசும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இதன்படி அதிக பால் வழங்கிய சங்கங்களின் உறுப்பினர்களில் முதல் இடத்தில் இருந்தவருக்கு ரூ.10,000/–மும், இரண்டாம் இடத்திற்கு ரூ.9,000/–மும், மூன்றாம் இடத்திற்கு ரூ.7,500/–ம் நான்கு முதல் பத்துவரை இடம் பெற்றிருந்தவர்களுக்கு தலா ரூ.5,000/–ம் வழங்கப்பட்டது குறிப்பிடதக்கது. இந்த நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் திருமதி.எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர்/ஆவின் நிர்வாக இயக்குநர் திரு அபூர்வ வர்மா, இ.ஆ.ப., ஆவின் இணை நிர்வாக இயக்குநர் திரு மு.கருணாகரன், இ.ஆ.ப., துணைப்பால் ஆணையர் திரு எம். ரவிகுமார், மற்றும் பால்வளத்துறை, ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**